<u>சாதாரணக்கூட்டம்</u>

2023–ம் ஆண்டு, மே மாதம் **29–ம்** தேதி **திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு** பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**திரு.மோ.செல்வராஜ்,**
**தலைவர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**<u>பொருள் எண்.1</u>**

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே....முன் தோன்றிய மூத்த குடியாம் நம் தமிழ் குடியின் பெருமைதனை பாரெங்கும் பரவச் செய்த பழந்தமிழ் பெருமக்கள் பலர் புகழ்வானில் நிலைத்து ஒளி வீசி வருகின்றனர். அழகிற்கு அழகு சேர்த்தாற்போல் அன்னை தமிழின் சிறப்பை தெள்ளத் தெளிவாய் உலகறியச் செய்த பல்கலை வித்தகர், உன்னத தலைவர் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சீர் பொங்க நடத்திட ‘‘முத்தமிழ் அறிஞர் தமிழர்க்கு சொத்தென’’ தந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் அறிவித்ததனை முன்னெடுத்து செயல்படுத்தும் விதமாய் பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக் கூடத்தினை சுற்றியுள்ள வளாக பகுதியினை கலைஞர் திடல் என பெயர் சூட்டியும், அப்பகுதி இருபுறமும் உள்ள நுழைவு வாயிலில் ‘‘கலைஞர் நூராற்றாண்டு நினைவு வளைவு ’’ நகராட்சியின் சார்பாக அமைத்து சிறப்புச் செய்திட வேண்டுமாய் திராவிட முன்னேற்ற கழக அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற துணைத் தலைவர் ஆகியோரின் ஒருமித்த முடிவின்படி, நகர்மன்ற தலைவர் அவர்கள் சார்பாக இத்தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் முடிவு செய்யலாம்.

கோப்பு எண். **0662 /2023**/எப்**1**

**தீர்மான எண்.99 நாள். 29.05.2023**

தமிழ்நாட்டின் முதல்வராக ஐந்து முறை ஆட்சியில் அமர்ந்து தமிழ்நாடு ஒப்பற்ற நல்ல திட்டங்களை செயல்படுத்திய முன்னாள் முதல்வர் மாண்புமிகு டாக்டர்.தலைவர் மு.கருணாநிதி அவர்களின் தமிழ் பணியினை போற்றிச் சிறப்பிக்கும் வகையில் இத்தீர்மானம் அனுமதிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்.2</u>

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர் திருமதி.மு.தாமரை அவர்களின் மே–2023 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண்.100 நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் மே மாதம் 23–ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண் | வரியின் விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 4.37 | 196.64 | 0.13 | 9.32 | 4.23 | 187.32 |
| 2. | காலியிட வரி | 1.62 | 3.34 | 1.62 | 0.74 | 0.00 | 2.59 |
| 3. | தொழில்வரி | 14.22 | 8.16 | 4.08 | 0.07 | 10.14 | 8.09 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 6.80 | 70.76 | 0.27 | 0.95 | 6.53 | 69.81 |
| 5 | வரியில்லா இனம் | 0.00 | 0.50 | 0.00 | 0.50 | 0.00 | 0.00 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.21 | 47.55 | 0.01 | 2.10 | 0.21 | 45.45 |
| | **மொத்தம்** | **27.22** | **326.95** | **6.11** | **13.68** | **21.11** | **313.26** |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1523/2013/சி1

**தீர்மான எண்.101 நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.4</u>**

பொதுசுகாதாரம் பூச்சிகளால் பரவக்கூடிய டெங்கு, மலேரியா, சிக்குன் குனியா போன்ற நோய்களை பரப்பும் ஏடிஎஸ் முதிர்க்கொசுக்களை ஒழிப்பு பணிக்கு லியோ மாலத்தீயான் மருந்து பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே மேற்காணும் நோய் தடுப்பு பணிகளை மேற்க்கொள்ள 500 லிட்டர் லியோ மாலத்தீயான் மருந்து ரூ.7,25,000/—க்குள் கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதாரம் ஏடிஎஸ் முதிர் கொசுக்களை தடுக்கவும், கட்டுபடுத்தவும் லியோ மாலத்தீயான் மருந்து 500 லிட்டர் ரூ.7,25,000/—க்குள் கொள்முதல், செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும், இப்பணிக்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். 596/2023/எச்1

**தீர்மான எண்.102, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.5</u>**

பொதுசுகாதாரப் பணிகளுக்கு தேவையான லியோ மாலத்தீயான் மருந்தினை கொள்முதல் செய்ய 28.04.2023—ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 18.05.2023—ந் தேதி கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை லிட்டர் 1—க்கு GST உட்பட ரூ.பை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.ஸ்ரீ ராகவேந்திரா இண்டஸ்ட்ரீஸ் 9—138—5, காமராஜ் நகர் 4வது வீதி, ஈரோடு | 1550 /— | அதிகம் |
| 2 | M/s. மாருதி ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் 45, தேவபுரம், பவானி | 1445.50 /— | குறைவு |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான லியோ மாலத்தீயான் மருந்தினை கொள்முதல் செய்ய வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய M/s. மாருதி ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ், பவானி என்ற நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.596/2023/எச்1

**தீர்மான எண்.103, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.
**பொருள் எண்.6**

நகராட்சிக்குட்பட்ட காவிரி கரையோர படுகைகள், நகராட்சின் பயன்பாட்டில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள், பொதுகழிப்பிடப்பகுதிகள், ஆடு வதை செய்யப்படும் பகுதிகள், நுன்உரசெயலாக்க மையப்பகுதிகள் மற்றும் சந்தைப்பகுதிகளில் உருவாகும் துர்நாற்றத்தை தடுக்கவும், கட்டுபடுத்தும் பணிக்காக லெமன்கிராஸ் ஆயில் 250 லிட்டர் கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.8,20,000/– ஆகும். எனவும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரப் பணிகளுக்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் 250 லிட்டர் ரூ.8,20,000/–க்குள் நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும், இப்பணிக்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்காலம்.

கோப்பு எண்.597/2023/எச்1

**தீர்மான எண்.104, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.
**பொருள் எண்.7**

பொதுசுகாதாரப் பணிகளுக்கு தேவையான லெமன் கிராஸ் ஆயிலை கொள்முதல் செய்ய 28.04.2023–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 18.05.2023–ந் தேதி கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை லிட்டர் 1–க்கு GST உட்பட ரூ.பை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.ஸ்ரீ ராகவேந்திரா இண்டஸ்ட்ரீஸ் 9–138–5, காமராஜ் நகர் 4வது வீதி, ஈரோடு | 3363 /– | அதிகம் |
| 2 | M/s. மாருதி ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் 45, தேவபுரம், பவானி | 3186 /– | குறைவு |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுகாதார பணிகளுக்கு தேவையான லெமன் கிராஸ் ஆயிலை கொள்முதல் செய்ய வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய M/s. மாருதி ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ், பவானி என்ற நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.597/2023/எச்1

**தீர்மான எண்.105, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.
**<u>பொருள் எண்.8</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 –2022–23 (Swachh Bharat Mission- 2022-23) ன் –கீழ் இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டு, அதில் 1.50 MLD சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 05.05.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சம் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | **Swachh Bharat Mision-2022-23** Providing Sewage Treatment plant 1.50 MLD Capacity (Soil Bio Technology ) with Interception & Diversion work | 378.00 | M/s பூரணி அன் கோ, 9, பூரணி விலா, செம்மொழித் தெரு, குடுவா சாலை, காரைக்குடி–2 | **0.05** குறைவு |
| | | | M/s ராமநாதன் அன் கோ, நெ.11, நாடு உடையார் தெரு, மேலகால்கந்தர் கோட்டை, திருச்சி–11 | **5.24** கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s பூரணி அன் கோ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1443/2023/இ1

**தீர்மான எண்.106, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.
**பொருள் எண்.9**

பள்ளிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 –2022–23 (Swachh Bharat Mission- 2022-23) –கீழ் இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டு, அதில் 3.50 MLD சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 05.05.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **Swachh Bharat Mission-2022-23** Providing Sewage Treatment plant 3.50 MLD Capacity (Soil Bio Technology) with Interception & Diversion work | 701.00 | M/s பூரணி அன் கோ, 9, பூரணி விலா, செம்மொழித் தெரு, குடுவா சாலை, காரைக்குடி–2 | **0.03** குறைவு |
| | | | M/s ராமநாதன் அன் கோ, நெ.11, நாடு உடையார் தெரு, மேலகால்கந்தர் கோட்டை, திருச்சி–11 | **5.46** கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.03% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s பூரணி அன் கோ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்1443/2023/இ1

**தீர்மான எண்.107, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.10</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் **15**வது நிதிக்குழு மானியம் **2022–2023** ஆம் ஆண்டிற்கான Tied Grant-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குத் தேவையான பேட்டரியால் இயங்கும் வாகனம் (Battery Operator Vechile) கொள்முதல் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் **24.04.2023 –** ம் தேதி திங்கட்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | **<u>15வது நிதிக்குழு மானியம் 2022–23 (Tied Grant)</u>**<br>திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 12 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனம் (Battery Operator Vechile) கொள்முதல் செய்தல் | 24,00,000/- | M/s.வளம்புரி இன்டஸ்ட்ரீஸ், 2, தியாகி குமரன் நகர், பி.என்.புதூர், 641041 | **0.86**<br>மதிப்பீட்டை கூடுதல் |
| | | | என்.ஏ.சி.இன்டஸ்ட்ரீஸ் 41/7பி, வசந்தபுரம், திருச்சி ரோடு, 637002 | **1.93**<br>மதிப்பீட்டை கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் **0.86%** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s.வளம்புரி இன்டஸ்ட்ரீஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு .எண்.171/2023/இ1

**தீர்மான எண்.108, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.
**<u>பொருள் எண்.11</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் **15**வது நிதிக்குழு மானியம் **2022–2023** ஆம் ஆண்டிற்கான Tied Grant-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குத் தேவையான இலகு ரக வாகனம் (Light Commercial Vechile) கொள்முதல் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் **24.04.202–** ம் தேதி திங்கட்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | <u>15வது நிதிக்குழு மானியம் 2022–23 (Tied Grant)</u> திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 5 எண்ணிக்கை இலகு ரக வாகனம் (Light Commercial Vechile) கொள்முதல் செய்தல் | 36,50,000/- | லட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ், 1எ58, ஒர்க்ஸ் ஷாப் கார்னர், சேலம் மெயின் ரோடு, மேட்டூர் டேம்–1 | **1.31** குறைவு |
| | | | மணி மோட்டார்ஸ் அன்டு டிரேடர்ஸ், 1எ5, தெர்மல் நால்ரோடு, தெர்மல் முதல் பாலம் அருகில், மேட்டூர் டேம்–1 | **1.89** கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 1.31% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s. லட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.171/2023/இ1

**தீர்மான எண்.109, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.
**<u>பொருள் எண்.12</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் பள்ளிபாயையம் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.16600/2022/CFC–1 நாள்.21.03.2023 செயல்முறையின் படி, 15வது நிதிக்குழு மானியம் 2022–2023 ஆம் ஆண்டிற்கான Tied Grant-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குத் தேவையான இலகு ரக (Light Commercial Vechile) வாகனங்களை கொள்முதல் செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிக்கான விளம்பரம் ஒப்பந்தப்புள்ளி செய்ததற்காக M/s.Vipras adz சென்னை அவர்களுக்கு ரூ.5,198/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 486/2022/இ1

**தீர்மான எண்.110, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.13</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் பள்ளிபாயையம் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.16600/2022/CFC–1 நாள்.21.03.2023 செயல்முறையின் படி, 15வது நிதிக்குழு மானியம் 2022–2023 ஆம் ஆண்டிற்கான Tied Grant-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குத் தேவையான பேட்டரியால் இயங்கும் வாகனம் (Battery Operator Vechile) செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்ததற்காக BRIGHT adverting சென்னை அவர்களுக்கு ரூ.5,008/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 486/2022/இ1

**தீர்மான எண்.111, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.14</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு ($15^{th}$ CFC) – பள்ளிபாளையம் நகராட்சி– Tied Grant 2022-2023 ம் ஆண்டு திட்டத்தின் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் சீரமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 27.04.2023 – ம் தேதி வியாழக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>15வது நிதிக்குழு மானியம் 2022–23</u>**<br>நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் சீரமைத்தல். | 40,00,000/- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர்,பள்ளிபாளையம் | **0.01** குறைவு |
| | | | கே.எஸ்.மாரியப்பன், 716பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | **0.09** கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.171/2022/இ1

**தீர்மான எண்.112, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.
**பொருள் எண்.15**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2022-2023 ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 24.03.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **திடக்கழிவு மேலாண்மை திட்டம் – 2022-23** திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் செய்திடல் | 2,48,54,000/- | ஆர்.எஸ்.கே.டெக் டிரேடர்ஸ், பி.லிமிட் எண் 2/165, துறையூர் உப்புளியபுரம் மெயின்ரோடு, வெங்கடாஜலபுரம், துறையூர் வட்டம், திருச்சிராப்புள்ளி. | 0.67% குறைவு |
| | | | அவர்லேண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பி.லிமிட், 70/1, முதல் தளம், அஞ்சுகம் நகர் 3வது தெரு, ஐபார்கான்பேட், சென்னை–600 083 | 0.25% கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.67% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஆர்.எஸ்.கே.டெக் டிரேடர்ஸ், பி.லிமிட் என்பவருக்கு பணி ஆணை வழங்குவதற்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் முன்அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண். 1008/2022/இ1

**தீர்மான எண்.113, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.16</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.12,16 மற்றும் 18 ஆகிய பகுதிகளில் குடிநீரல்லாத உபயோகத்திற்கென வைக்கப்பட்டுள்ள சின்டெக்ஸ் (Sintex) தொட்டிகள் நீண்ட நாட்கள் உபயோகத்தின் காரணமாக சேதமடைந்துள்ளதால், தண்ணீர் அதிகளவில் வீணாகி வருகிறது. எனவே, கீழ்கண்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள சேதடைந்துள்ள சின்டெக்ஸ் (Sintex) தொட்டிகளுக்கு பதிலாக HDPE Sintex புதிய தொட்டிகள் வாங்கிப் பொருத்த ஆகும் செலவினம் ரூ.60,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண்.464/2023/இ1**

**தீர்மான எண்.114, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.
**<u>பொருள் எண்.17</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.12,16 மற்றும் 18 ஆகிய பகுதிகளில் குடிநீரல்லாத உபயோகத்திற்கென வைக்கப்பட்டுள்ள பழுதடைந்துள்ள சின்டெக்ஸ் (Sintex) தொட்டிகளுக்கு பதிலாக புதிய தொட்டிகள் வாங்கும் பணிக்காக 06.04.2023 தேதி வியாழக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/S ஈஸ்வரா ப்ளூ மெட்டல்ஸ்,<br>க.எண். 4/19எ, குமாரபாளையம் மெயின் ரோடு, கலியனூர்,பள்ளிபாளையம் | ரூ. 59166/– |
| 2 | கே.சீரங்கன்,<br>196,ரங்கனூார்,எலந்தகுட்டை,<br>பள்ளிபாளையம் | ரூ.59260/– |
| 3 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு,<br>பவானி. | ரூ.59508/– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S ஈஸ்வரா ப்ளூ மெட்டல்ஸ் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.464/2023/இ1

**தீர்மான எண்.115, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15 சுபாஷ் நகர் பகுதியில் ஆவாரங்காடு முதல் மயானம் வரை செல்லும் ஓடை சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தூர் வாரப்பட்டதால் மழைக்காலங்களில் ஓடையில் தண்ணீர் செல்ல முடியாமல் அருகில் உள்ள குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகுந்து விடுகிறது. எனவே, பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்சொன்ன ஓடையினை JCB இயந்திரம் மூலம் தூர் வாரவும், JCB இயந்திரம் செல்ல முடியாத இடங்களில் ஆட்களை கொண்டு தூர்வாரவும் மீனவர் தெருவில் ஆற்றங்கரையோர தாழ்வான பகுதியில் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகுந்து விடுவதால் அப்பகுதியில் மண்ணை கொட்டி மேட்டுப்பகுதியாக்கவும் ஆகும் செலவினம் ரூ.2,40,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.531/2023/இ1

**தீர்மான எண்.116, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15 சுபாஷ் நகர் பகுதியில் ஆவாரங்காடு முதல் மயானம் வரை தூர் வாரும் பணிக்காக 06.04.2023 தேதி வியாழக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/S ஈஸ்வரா ப்ளு மெட்டல்ஸ்,<br>க.எண். 4/19எ, குமாரபாளையம் மெயின் ரோடு, கலியனூர்,<br>பள்ளிபாளையம் | ரூ. 2,35,726/— |

| | | |
|---|---|---|
| 2 | கே.சீரங்கன்,<br>196,ரங்கனுார்,<br>எலந்தகுட்டை,<br>பள்ளிபாளையம் | ரூ.2,52,992/— |
| 3 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு,<br>பவானி. | ரூ.2,85,514/— |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S ஈஸ்வரா ப்ளு மெட்டல்ஸ் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.531/2023/இ1

**தீர்மான எண்.117, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.
**<u>பொருள் எண்.20</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் உள்ள 21 வார்டு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்வதற்காக 93 விசைபம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த விசைபம்புகளில் பழுது ஏற்பட்டால் பொதுமக்களுக்கு சீரான முறையில் தண்ணீர் தேவை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே பொதுமக்களுக்கு தடையின்றி தண்ணீர் விநியோகம் செய்ய உடனுக்குடன் பழுதுகளை சரிசெய்து பயன்பாட்டில் வைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10,00,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.530/2022/இ1

**தீர்மான எண்.118, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.
**<u>பொருள் எண்.21</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ‘‘அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் ‘‘ திட்டத்தினை பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆவாரங்காடு, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் கூடுதலாக உள்ள

கட்டிடத்திற்கு முன்புறம், அலுமினியம் கூரை அமைக்கவும், சமையல் கூடத்திற்கு RO Plant வாங்கிப் பொருத்தவும் UPVC ஜன்னல் மற்றும் கதவுகள் வாங்கி பொருத்தும் பணிகளுக்கு ஆகும் செலவினம் ரூ.4,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.38/2022/இ1

**தீர்மான எண்.119, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.
<u>பொருள் எண்.22</u>

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளை ஓராண்டு சாதனைகளை விளம்பரம் செய்ய கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் அவர்கள் தினகரன் பொங்கல் மலர் நாளிதழில் 15.01.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. இந்த விளம்பரத்திற்கான தொகை இன்னால் வரைக்கும் செலுத்தப்படவில்லை. எனவே, விளம்பர செய்ததற்காக கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் நாளிதழிக்கு ரூ.8689/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.182/2023/இ1

**தீர்மான எண்.120, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.
<u>பொருள் எண்.23</u>

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளை ஓராண்டு சாதனைகளை கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் அவர்கள் தமிழ் முரசு நாளிதழில் 2022–ல் விளம்பரம் செய்யப்பட்டது. இந்த விளம்பரத்திற்கான தொகை இன்னால் வரைக்கும் செலுத்தப்படவில்லை. எனவே, விளம்பர செய்ததற்காக கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் நாளிதழிக்கு ரூ.9975/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது..

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.182/2023/இ1

**தீர்மான எண்.121, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.24</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வரும் 1No of RICOH Aficio MP2501SP (Model No.E338MB20317, RICOH Aficio MP2501SP (Model No.E338MB20318) and RICOH Aficio IMC2000 (Modal No.3080R520393 **3** எண்ணிக்கை பிரிண்டர்களுக்கு **2023 – 2024** ஆண்டுகளுக்கான வருடாந்திர பராமரிப்பிற்கு ரூ.77,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.531/2023/இ1

**தீர்மான எண்.122, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கலாம்.

**<u>பொருள் எண்.25</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வரும் **3** எண்ணிக்கை பிரிண்டர்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிக்கு **04.05.2023** தேதி வியாழக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ்,28/1, ராமகிருஷ்ணாபுரம் வடக்கு, சிட்ரா எதிர்புறம், கரூர்–639 001. | ரூ. 76,700/– |
| 2 | சி.எஸ்.இன்போடெக், 7/D/E-O, 79-N , ராமகிருஷ்ணாபுரம் மேற்கு, கரூர்–639001 | ரூ.88,500/– |
| 3 | இன்–சைனிக், 172/3, ராமலிங்கம் ரோடு மேற்கு. ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்–641 002. | ரூ.94,990/– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ், அவர்களின் குறைந்தவிலைப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.531/2023/இ1

**தீர்மான எண்.123, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.26**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவரை பல்வேறு கோரிக்கைகளுடன் சந்திக்க பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் நாள்தோறும் வருகின்றனர். அவர்களது வருகையின் போது பொதுமக்கள் மற்றும் பிரமுகர்கள் அமர போதிய இருக்கை வசதி இல்லாத காரணத்தினால் நீண்ட நேரம் நின்று கொண்டிருக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. எனவே 3 மற்றும் 2 வரிசை கொண்ட இரும்பு சேர்கள் வாங்குவது அவசியமானதாக உள்ளது. மேலும், பொறியியற் பிரிவில் மேஜை மற்றும் நாற்காலி நீண்ட நாட்கள் பயன்பாட்டின் காரணமாக பழுதடைந்து உள்ளதால் அவற்றிற்கு பதிலாக புதிய மேஜை மற்றும் நாற்காலியும் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட மேஜை, நாற்காலி, சேர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.77,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.. 558/2023/இ1

**தீர்மான எண்.124, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.27**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகிய அறைகளின் முன்பு இருக்கை வசதி செய்யும் பணிக்கான 12.05.2023ம் தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சூரியா இண்டஸ்ட்ரீஸ்,<br>48ஏ, பெருந்துறை ரோடு,<br>செங்கோடம்பாளையம்,ஈரோடு–12 | ரூ. 76,110/– |

| | | |
|---|---|---|
| 2 | ஜெயகுமார் டிரேடர்ஸ்,<br>96,திரு.வி.ப தெரு–II,<br>புதிய ஆசிரியர் காலணி,<br>ஈரோடு–11 | ரூ.76,625/– |
| 3 | பொண்முகம் டிரேடிங் கம்பெணி,<br>எல்–92, மாணிக்கம்பாளையம் ஹவுசிங் யூனிட், அண்ணா நகர், ஈரோடு–11 | ரூ. 76,975/– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 558/2022/இ1

**தீர்மான எண்.125, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

<u>**பொருள் எண்.28**</u>

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் TN-34 D 4081 என்ற ஈப்பு வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாகனத்தில் பேட்டரி (Battery) பழுதாகி உள்ளது என ஓட்டுநர் தெரிவித்துள்ளார். அதன் பேரில் வாகனத்தினை ஆய்வு செய்தததில் பேட்டரி பழுதாகி வாகனத்தினை இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழைய பேட்டரிக்கு பதிலாக புதிய பேட்டரி கொள்முதல் செய்ய ஆகும் செலவினம் ரூ.9.500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.558/2022/இ1

**தீர்மான எண்.126, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

<u>**பொருள் எண்.29**</u>

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் TN-34 D 4081 என்ற ஈப்பு வாகனம் உள்ள பழைய பேட்டரிக்கு பதிலாக புதிய பேட்டரி வாங்கி பொருத்தும் பணிக்கான

05.05.2023ம் தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ செந்தில் முருகன் எலக்ட்ரிக்கல் & யூபிஎஸ் & பேட்டரிஸ்,73, திருச்செங்கோடு ரோடு, டிவிஎஸ் மேடு, பள்ளிபாளையம். | ரூ. 9,450/– |
| 2 | எஸ்.எஸ்.எம் பேட்டரிஸ், 43/1, சங்ககிரி மெயின் ரோடு, பிரிவு : 21/2, அகில்மேடு 7–வது வீதி, ஈரோடு | ரூ.9,700/– |
| 3 | ஸ்ரீசக்கி பவர்ஸ் 43, சங்ககிரி மெயின் ரோடு, அகில்மேடுஇ பள்ளிபாளையம் | ரூ. 9,900/– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ செந்தில் முருகன் எலக்ட்ரிக்கல் & யூபிஎஸ் & பேட்டரிஸ் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.24/2022/இ1

**தீர்மான எண்.127, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.30**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் பதிவு எண்.TN 34 D 4081 நகராட்சி பொறியாளர் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் வாகனம் 4,85,520 கி.மீ தூரம் கடந்துள்ளதால் இவ்வாகனத்தினை பராமரித்து, நல்ல முறையில் பயன்பாட்டில் வைக்கவும், 4,85,520 கி.மீ தூரம் கடந்தும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமல் பயன்பாட்டில் இருந்ததால் கூடுதலான செலவினம் ஏற்படும் என்பதால் உடனடியாக பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் **ரூ.20,000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.24/2022/இ1

**தீர்மான எண்.128, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.31</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் TN-34 D 4081 என்ற ஈப்பு வாகனத்திக்கு பராமரிப்பு பணிக்கான **15.05.2023**ம் தேதி திங்கட்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஈரோடு ஆட்டோ கேர்,<br>**329**, காவேரி ரோடு, கருங்கல்பாளையம், ஸ்ரீ ஐயப்பா சேவா கோவில் எதிரில்,<br>ஈரோடு **– 638 003.** | ரூ. **19,890/–** |
| 2 | ஸ்ரீ நித்தி ஆட்டோ,<br>இந்து நகர்,பழையபாளையம்,<br>பெருந்துறை ரோடு,<br>ஈரோடு **– 638 009.** | ரூ.**21,450/–** |
| 3 | டாடா போர்ஸ் ஆட்டோ கேர்,<br>**38/3**, பெருமாள் கவுண்டர் தோட்டம்,<br>உழவன் தெரு, சூரம்பட்டி,<br>ஈரோடு **–9.** | ரூ.**22,380/–** |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஈரோடு ஆட்டோ கேர், அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.24/2022/இ1

**தீர்மான எண்.129, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.32</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள ஆணையாளர் அறையில் பயன்படுத்தப்பட்டு வரும் குளிர்சாதன இயந்திரம் உயர் மின்னழுத்தின் காரணமாக Circuit Board முழுவதும் பழுதடைந்துள்ளது. எனவே குளிர்சாதன இயந்திரத்தின் பழுதினை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்றதில் ரூ.**10,000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.439/2023/ இ1

**தீர்மான எண்.130, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.33</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள ஆணையாளர் அறையில் பயன்படுத்தப்பட்டு வரும் குளிர்சாதன இயந்திரம் உயர் மின்னழுத்தின் காரணமாக Circuit Board முழுவதும் பழுதடைந்துள்ளதனை சரிசெய்து மற்றும் பராமரிப்பு பணிகள் பணிகளை மேற்கொள்ள 10.05.2023 ம் தேதி புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கே.விஜய்பாபு,<br>ஏ.சி.மெக்கானிக்<br>23/ஏ7, ரூபி காம்பளக்ஸ்,பள்ளிபாளையம் | 9,950.00 |
| 2 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு, பவானி. | 10,010.00 |
| 3 | கே.எஸ்.மாரியப்பன்,<br>716பி,குதிரைகல்மேடு,<br>காடப்பநல்லூர் (P.O), பவானி | 10,250.00 |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய கே.விஜய் பாபு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.439/2023/இ1

**தீர்மான எண்.131, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.34</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் சேலத்தில் 07.05.2023ம் தேதி நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி, தமிழக அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொண்ட வளர்ச்சிக் பணிகள், பொதுமக்களுக்கான திட்டங்களை பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பள்ளிபாளையம் நகராட்சிப் பகுதியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இரண்டு இடங்களில் தொலைக்காட்சி வாயிலாக விளம்பரம் செய்யவும், மூன்று இடங்களில் பிளக்ஸ் பேனர் வைக்க ஆகும் செலவினம் ரூ.33,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.598/2023/இ1

**தீர்மான எண்.132, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.35</u>**

தமிழக அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொண்ட வளர்ச்சிக் பணிகள், பொதுமக்களுக்கான திட்டங்களை பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பள்ளிபாளையம் நகராட்சிப் பகுதியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இரண்டு இடங்களில் தொலைக்காட்சி வாயிலாக விளம்பரம் செய்யவும், மூன்று இடங்களில் பிளக்ஸ் பேனர் வைக்கும் பணிக்காக 12.05.2023 ம் தேதி வியாழக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/S ஈஸ்வரா ப்ளு மெட்டல்ஸ்,<br>க.எண். 4/19எ, குமாரபாளையம் மெயின் ரோடு, கலியனூர்,<br>பள்ளிபாளையம் | ரூ. 32,600/— |
| 2 | கே.சீரங்கன்,<br>196,ரங்கனூார்,<br>எலந்தகுட்டை,<br>பள்ளிபாளையம் | ரூ. 32,800/— |
| 3 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு,<br>பவானி. | ரூ. 33,100/— |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S ஈஸ்வரா ப்ளு மெட்டல்ஸ் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.598/2023/இ1

**தீர்மான எண்.133, நாள். 29.05.2023**
அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.36**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளில் உள்ள மொத்த மின் விளக்குகள் 1393 எண்ணம் ஆகும். இதனை நமது நகராட்சியின் மூலமாக மராமத்துப்பணி பார்க்கப்பட்டு வருகிறது. மேலும் அதற்கு தேவையான மின் உதிரி பாகங்கள் மராமத்துப்பணிக்காக நகராட்சியால் ஒப்பந்த முறையில் கொள்முதல் செய்து வருகிறது. தற்போது உபரிபாகங்கள் போதுமானதாக இருப்பில் இல்லாத காரணத்தினால் தெருவிளக்கில் ஏற்படும் பழுதினை சரிசெய்ய காலதாமதம் ஏற்படும். இதனால் பொதுமக்கள் பெரும் அவதிக்கு உள்ளாவதுடன் தெருவிளக்கு இல்லாத பகுதிகளில் நடைபெறும் சமூக விரோத செயல்களும் நடைபெற வாய்ப்புள்ளது. எனவே அத்தகைய நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள அனைத்து தெருவிளக்கு பழுதினை உடனுக்குடன் சரி செய்ய தேவையான உபரிபாகங்களை ஒப்பந்தம் மூலம் கொள்முதல் செய்து கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10,00,000/– /–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.599 /2023/இ1

**தீர்மான எண்.134, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.37**

பள்ளிபாளையம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் 2022–2023 ஆம் ஆண்டிற்கான Tied Grant-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குத் தேவையான பேட்டரியால் இயங்கும் வாகனம் (Battery Operator Vechile) கொள்முதல் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 24.04.2023 – ம் தேதி திங்கட்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>**15வது நிதிக்குழு மானியம் 2022–23 (Tied Grant)**</u> திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 12 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனம் (Battery Operator Vechile) கொள்முதல் செய்தல் | 24,00,000/- | M/s.வளம்புரி இன்டஸ்ட்ரீஸ், 2, தியாகி குமரன் நகர், பி.என்.புதூர், 641041 | **0.86** மதிப்பீட்டை கூடுதல் |
| | | | என்.ஏ.சி.இன்டஸ்ட்ரீஸ் 41/7பி, வசந்தபுரம், திருச்சி ரோடு, 637002 | **1.93** மதிப்பீட்டை கூடுதல் |

மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால், அதில் குறைந்த சதவீகித ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் ஆ/ள.வளம்புரி இன்டஸ்ட்ரீஸ் என்பவரின் ஒப்பந்த விலைப்புள்ளிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கொடுத்துள்ள விலையை குறைத்து வழங்குமாறு (Negotiation) 24.04.2023ல் மேற்படி ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டத்தில் 25.04.2023ம் தேதியில் ஒப்பந்ததாரர் கீழ்கண்டுள்ளவாறு விலை குறைத்து வழங்கியுள்ளார் அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>**15வது நிதிக்குழு மானியம் 2022–23 (Tied Grant)**</u> திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 12 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனம் (Battery Operator Vechile) கொள்முதல் செய்தல். | 24,00,000/- | M/s.வளம்புரி இன்டஸ்ட்ரீஸ், 2, தியாகி குமரன் நகர், பி.என்.புதூர், 641041 | 4.59 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணிக்கு விலையை குறைத்ததை ஒப்புநோக்குகையில் 4.59% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s.வளம்புரி இன்டஸ்ட்ரீஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.171/2023/இ1

**தீர்மான எண்.135, நாள். 29.05.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.38</u>**

நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **9–**ல் பள்ளிபாளையம் அமாணி கிராமம் SFNo.262/1A1B, 3A1B-ல் வெடியரசம்பாளையம் ரோட்டில் காலியாக உள்ள இடத்தில் தொழில்சாலைகூடம் Block-1 GI Sheet கட்டிடம் **1925.28** ச.மீ, Block -2 RCC Roof கட்டிடம் **185.93** ச.மீ பரப்பளவில் கட்டுவதற்கு மனுதாரர் திருமதி.மஞ்சுளா க/பெராஜேந்திரன், கதவு எண்.**38/96,** நடேச செட்டியார் தெரு, பள்ளிபாளையம் என்பவர் கணினி வழியாக நகர் ஊரமைப்புதுறை, நாமக்கல் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துள்ளார், இக்கோப்பினை பரிசீலனை செய்யப்பட்டு, மேற்படி இடத்தில் தொழிற்சாலைக்கூடம் கட்டுவதற்கு **(**Block-1& Block -2) ஆகியவற்றிற்கு மனையிடத்தினை உட்பிரிவு செய்யப்பட்டு LP/DTCP(ND)No. 201/2022 மற்றும் திட்ட அனுமதி எண்.BP/ DTCP(ND)No. 3/2022 **–**ன்படி **29.10.2022–**ல் உதவி இயக்குநர், நகர்ஊரமைப்புத் துறையினரால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது**.** இவ்விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது**.**

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்**.**

கோப்பு எண்.**590 /2022/**எப்**1**

**தீர்மான எண்.136, நாள். 29.05.2023**
பதிவுசெய்யப்பட்டது**.**
**<u>பொருள் எண்.39</u>**

நகராட்சி மற்றும் நகராட்சியினை ஒட்டியுள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள **( 9** பள்ளிகள்) **1** முதல் **5** ம் வகுப்பு பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சர் காலை சிற்றுண்டி விநியோகம் செய்வதற்கான விநியோகஸ்தர்கள் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 18.05.2023 ம் தேதி வியாழக்கிழமைஅன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது**.** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது**.**

| வ எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த காலம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை / ஒரு மாணவருக்கு |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சியில் விடுபட்டுள்ள அரசு துவக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்க்கு முதல்வரின் காலை உணவுத் திட்டத்தினை செயல்படுத்தும் பணி | ஒரு வருடம் | M/s சப்தகிரி கேட்டரிங் சர்வீஸ், **229,** நக்கீரர் தெரு, ஈரோடு**–638001.** | **ரூ.11.40** |
| | | | M/s நோ புட் வேஸ்ட் **4,** கொத்தாரி லேஅவுட் முதல் தெரு, ராமநாதபுரம், கோயம்புத்தூர்**–641 045.** | **ரூ. 12.50** |

அலுவலக குறிப்பு

எனவே, மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரூ. 11.50 வழங்கியுள்ள ஒப்பந்ததாரர், M/s சப்தகிரி கேட்டரிங் சர்வீஸ், ஈரோடு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண். 394/2023 /இ1

**தீர்மான எண்.137, நாள். 29.05.2023**
அனுமதிக்கப்பட்டது.